**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 116/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **அ.சா.4** |
| Name : | **திரு. இளங்கோவன்** |
| Father's Name/Husband Name: | **திரு. கந்தசாமி** |
| Village : | மருதடி |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 46/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 14.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–98வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் மற்றும் ஆடு, மாடு மேய்த்து வருகிறேன். அ.சா.1 விஜயலெட்சுமி என்பவரை தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையெழுத்து நான் போட்டது தான். நான் மருதடி குன்னுமேடு ரோட்டில் போய்க்கொண்டிருந்தேன். அப்போது பாடாலூர் போலிசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் நான் போடமாட்டேன் என்று சொன்னேன் என்னுடன் இருந்த அ.சா.3 தனராசு அதெல்லாம் பிரச்சனை ஒன்றும் வராது கையொப்பம் போடு என்று சொன்னார். நானும் போட்டேன். மருதடிக்கு போலிஸ் வந்து சென்றதற்காக சாட்சி கையொப்பம் கேட்டதால் நான் போட்டேன். அந்த **கையொப்பம் மட்டும் அ.சா.ஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd-xxxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.